# தூத்துக்குடியில் ரூ.5,200 கோடியில் கப்பல் கட்டும் தளம்!

# தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள்!

## நிதி நிலை அறிக்கை!... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி


மருத்துவ உதவி, ஆம்புலன்ஸ் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு விலங்குகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் 'வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்' திட்டத்திற்கு, இதுவரை 35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலன்**

138. சமூகப் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மீன்வளங்களை, சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் பாதுகாத்துப் பராமரிப்பதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்விற்கு அதிகபட்ச முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான செயல்திறன்மிக்க திட்டங்கள் மூலம் மாநிலத்தின் மீன்வளத் துறை வளர்ச்சி பெற்ற துறையாக திகழ்கிறது.

139. இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டு, மீட்க இயலாத நிலையில் உள்ள 309 விசைப்படகுகள், 51 நாட்டுப்படகுகளின் உரிமையாளர்களுக்கு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 20 கோடி ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திலிருந்து இறந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு 18 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

140. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் வழங்குவதற்காகவும் மீனவர்கள் தென்பகுதியில் மீன்பிடிக்கச் செல்ல ஏதுவாகவும், **சிறப்பு வாழ்வாதார தொகுப்புத் திட்டத்தினை** முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். இத்திட்டத்தின் ஒருபகுதியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் தங்கச்சிமடம் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பாம்பன் பகுதியில் தூண்டில் வளைவு 58 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் குந்துக்கால் பகுதியில் மீன்பிடி இறங்குதளம் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 356 கோடி ரூபாய் செலவில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், 3,357 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 246 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பணிகள் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.




141. மீனவக் குடும்பங்க ளுக்கு வழங்கப்படும் மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரண உதவித் தொகை 6,000 ரூபாயாகவும். மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை 8,000 ரூபாயாகவும், இந்த ஆட்சிக்காலத்தில் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், மீன்பிடி குறைவு கால நிவாரணத் தொகை, மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை மற்றும் கடல் மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டங்களின் கீழ் 1659 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**பால் வளம்**

142. கிராமப்புற மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய பால்வளத் துறையின் வளர்ச்சிக்கும், பொதுமக்கள் அனைவருக்கும் தரமான பால் கிடைப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பால் பண்ணைகள் நவீனமயமாக்கலுக்காக, கடந்த ஐந்து ஆண்டுகளில் 758 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் விலையினை லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்த்தியதன் மூலம் 3.70 இலட்சம் பால் உற்பத்தியாளர்களும், விற்பனை விலையை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைத்ததன் மூலம் நுகர்வோர்கள் ஆண்டொன்றுக்கு 270 கோடி ரூபாய் சேமிப்பும் பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்த இடைக் கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு 4,435 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**கைத்தறி மற்றும் துணிநூல்**

143. நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிரூட்டுவதற்குத் தேவையான மூலதன உதவியை வழங்கிடும் நோக்கத்தோடு **'கைத்தறி ஆதரவுத் திட்டம்'**, விசைத்தறித் தொழிலை மேம்படுத்திட **'விசைத்தறி நவீனமயமாக்கும் திட்டம்;**, தொழில்நுட்ப ஜவுளித்துறையின் உற்பத்தியை ஊக்குவிக்க **'தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி இயக்கம்'**, கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை மின் வணிக முறை மூலம் உலகச் சந்தைகளுக்கு விரிவுபடுத்த **'கைவினை சந்தைப்படுத்துதல் இயக்கம்'** ஆகிய புதிய திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. நெசவாளர் முத்ரா திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில், தமிழ்நாடு தொடர்ந்து முதன்மை மாநிலமாக திகழ்வதை இந்த அரசு உறுதிசெய்துள்ளது.

144. கைத்தறி இரகங்களின் ஏற்றுமதியினை அதிகரிக்கும் நோக்கிலும், நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரவும், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 புதிய கைத்தறிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பட்டுச் சேலைகளுக்கு புகழ்பெற்ற ஆரணி பகுதியில் 5,000 கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

145. ஏறத்தாழ 70,000 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மின்சாரம், இரு மாதங்களுக்கு 300 அலகுகளாக 2023 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடெங்கும் 30 முதல்வர் படைப்பகங்கள்!

ஏறத்தாழ 1,60,000 விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரம். இரு மாதங்களுக்கு 1000 அலகுகள் வரை உயர்த்தியும், 1,000 அலகுகளுக்கு மேல் மானிய விலையிலும் 2023 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 28,108 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில். 'தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்' கீழ் வழங்கப்பட்டு வரும் முதியோர் ஓய்வூதியம், 2023 ஆம் ஆண்டு முதல் மாதமொன்றுக்கு 1200 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

146. ஒவ்வொரு ஆண்டும் 1.77 கோடி ஆண்கள் மற்றும் 1.77 கோடி பெண்கள் பயன்பெறும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பும் வழங்கிவரும் **'வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினைச்'** செயல்படுத்த கடந்த ஐந்து ஆண்டுகளில் 3,021 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

147. ஜவுளித் தொழிலில் முன்னணி வகிக்கும் தமிழ்நாட்டில், தொழில்நுட்ப ஜவுளியின் ஒரு பிரிவான விளையாட்டு ஜவுளி ஆடைகளின் தரமான உற்பத்தியினை உறுதி செய்திடவும். அவற்றின் தரத்தினைப் பரிசோதிக்கவும், கோயம்புத்தூரில் உள்ள தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகத்தில் (SITRA, Coimbatore) 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன தரப் பரிசோதனை மையம் (Advanced Quality Testing Laboratory) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கு 612 கோடி ரூபாய் உட்பட கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு 1943 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உயர் கல்வியில் தேசிய சராசரியில் தமிழ்நாடு முன்னிலை!

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி**

148. செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை கணிசமாக மேம்படுத்துவதன் ஒரு பகுதியாக, மனைப்பிரிவு மற்றும் கட்டட விண்ணப்பங்களுக்கான திட்ட அனுமதிகளை எளிதாகப் பெறுவதற்கென. ஒற்றைச் சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 24,446 மனைப்பிரிவு விண்ணப்பங்களும், 9,002 கட்டட விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கிடவும். தடையின்மைச் சான்று (NOC) வழங்கும் 11 துறைகளும், ஒற்றைச் சாளர முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

149. பொதுமக்கள் சுயசான்றிதழ் திட்டத்தின் கீழ் கட்டட அனுமதியை எளிதாகவும், உடனடியாகவும் பெறும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 1.7 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். 3,500 சதுரஅடி வரை மனைப்பரப்பில் கட்டப்படும் குடியிருப்புகளுக்குப் பொருந்தும் இத்திட்டத்தின் மூலம், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் நடுத்தரப் பிரிவினர் பெருமளவு பயன்பெற்று வருகின்றனர். கோயம்புத்தூர், மதுரை, ஓசூர் மற்றும் இராஜபாளையம் ஆகிய 4 நகரங்களுக்கான பெருந்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

150. சென்னையின் உயிர்நாடியாக. நகர்ப்புரப் போக்குவரத்து விளங்குகிறது. கிளாம்பாக்கத்தில் தற்போது முழுமையாகச் செயல்பட்டு வரும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், தென்மாவட்டங்களுக்கான இணைப்பை மேம்படுத்துவதுடன், கோயம்பேடு முனையத்தின் போக்குவரத்து நெரிசலையும் கணிசமாகக் குறைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து, மேற்கு நோக்கிச் செல்லும் பேருந்துப் போக்குவரத்திற்காக, கூத்தம்பாக்கம் புறநகர் பேருந்து முனையம் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. இந்த முனையங்கள். பேருந்து இயக்கங்களைப் பரவலாக்கி, பெருநகரப் பகுதி முழுவதும் சீரான போக்குவரத்தை உறுதி செய்யும்.

151. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம், பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ். வீடு ஒன்றிற்கு 210 இலட்சம் ரூபாய் மானியத்தில் 2,21212 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், 43,309 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், பொருளாதாரத்தில் நலிவு வற்ற மக்களுக்காக 58,211 அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், 53,227 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அடுக்குமாடிக் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்யும் திட்டத்தின் கீழ், 11,054 சிதிலமடைந்த குடியிருப்பு கள் மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 29,557 குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் இக்கட்டுமானப் பணிகளுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 11,708 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

152. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பன்முக பயணத் திட்டமிடலுக்கான, இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த பயணச்சீட்டு செயலியான 'சென்னை ஒன்று'. இதுவரை 10.5 இலட்சம் பயணிகளால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 70,000க்கும் அதிகமான பயணச்சீட்டுகள் தினமும் இச்செயலி மூலம் வழங்கப்படுகிறது. இந்த இடைக் கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 7,547 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொதுப் பணி**

153. பொதுப்பணித் துறை. பல்வேறு அரசுத் துறைகளுக்கான கட்டடங்களை அமைத்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமன்றி, பாரம்பரியக் கட்டடங்களை அவற்றின் தொன்மை மாறாமல் புதுப்பிக்கும் பணிகளையும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. சென்னைகிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம் உள்ளிட்ட பல்வேறு எழிலார்ந்த கட்டடங்கள், ஆயிரக்கணக்கான மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை, கிழக்கு கடற்கரைச் சாலை, முட்டுக்காடு பகுதியில் கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையம், கோயம்புத்தூர், திருச்சி, கடலூர், சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் மாபெரும் நூலகங்கள் அமைக்கும் பணிகளையும் பொதுப்பணித் துறை மேற்கொண்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் 471 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 64 புராதன கட்டடங்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியை சிறப்புற நிறைவேற்றி அனைவருடைய பாராட்டுதல்களை யும் பெற்றுள்ளது. மேலும், மயிலாடுதுறை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகங்கள் 643 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் பொதுப்பணித் துறைக்கு 1,694 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர்கள் நலன்**

154. அரசின் திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி, மக்கள் நலனைப் பாதுகாப்பதில் பெரும்பங்கு வகிக்கும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் காப்பதில் இந்த அரசு மிகுந்த முன்னுரிமை வழங்கி வருகிறது. அரசின் நிதி வருவாய் ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வரும் நிலையிலும், நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்திடத் தேவையான கூடுதல் நிதி ஒதுக்கிட வேண்டிய சூழலிலும், அனைத்துத் தடைகளையும் கடந்து, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களை இந்த அரசு தொடர்ந்து காத்து வருகிறது. அவர்கள் நலன் காக்க, கீழ்க்கண்ட நடவடிக்கை களை நமது அரசு எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 01.01.2020 முதல் 31.12.2021 வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அகவிலைப்படி உயர்வை மீண்டும் வழங்கியது:

அதே போன்று ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து பணமாகப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையை மீண்டும் செயல்படுத்தியது:

அரசுப் பணியாளர்கள் விபத்தில் உயிரிழக்க நேர்ந்தால் ஒரு கோடி ரூபாயும், இயற்கை மரணமடைந்தால் பத்து இலட்சம் ரூபாயும், அவர்கள் குடும்பத்தினர் பெறும் வகையில் வங்கிகள் மூலம் ஆயுள் காப்பீடு:

**பணியிடை மரணமடையும் அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கு ஐந்து முதல் பத்து இலட்சம் ரூபாய் வரை திருமணச் செலவிற்கான நிதியுதவி: உயர்கல்வி உதவியாக பத்து இலட்சம் ரூபாய்:**

**அரசு அலுவலர்களின் குழந்தைகளுக்கு தொழிற் கல்வி பயில முன்பணம் ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும்**

**அறிவியல் கல்வி பயில முன்பணம் ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தியது:**

**அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண முன்பணம் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியது:**

**அரசுப் பணியாளர்களுக்கான பண்டிகை முன்பணத்தை இருபதாயிரம் ரூபாயாகவும், ஓய்வூதியதாரர்களுக்கான பண்டிகை முன்பணத்தை ஆறாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியது:**

**ஓய்வூதியதாரர்களுக்கான பொங்கல் பரிசுத் தொகையை ஆயிரமாக உயர்த்தி வழங்கியது:**

**பெண் அரசு அலுவலர்களின் மகப்பேறு விடுப்பை 9 மாதத்திலிருந்து 12 மாதங்களாக உயர்த்தியது:**

என அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

155. இவை அனைத்திற்கும் மகுடமாய் அமையும் வகையில், அரசுப் பணியாளர்களின் இருபத்து இரண்டாண்டு கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அவர்களுக்கான 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தினை' இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்கள், பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு நிகரான ஓய்வூதியப் பலன்களைப் பெறுவார்கள். அரசு அலுவலர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற இத்திட்டத்தில், கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட மாத ஓய்வூதியம், அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு, குடும்ப ஓய்வூதியம், குறைந்தபட்ச ஓய்வூதியம், ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெறும் வசதி மற்றும் இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ஆகிய பலன்கள் அடங்கியுள்ளன. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான அரசின் கூடுதல் பங்களிப்பிற்கென ஒட்டுமொத்தத் தொகையாக 11,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 9ஆம் பக்கம்

# தமிழ்ப் புதல்வன் - 5,40,511 மாணவர்கள் பயன்!